விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 165 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 19 திங்கட்கிழமை (02.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான தேன்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு போதியிடப்படுகிறது.

Marketed By:-
(C-3099)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

## தாமரைப் பூ பறிக்கச் சென்ற இருவர் குளத்தில் மூழ்கிப் பலி

### முல்லைத்தீவில் பரிதாபம்

(முல்லைத்தீவு)

குளத்தில் தாமரைப் பூ பறிக்கச் சென்று நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்த துயரச் சம்பவம் நேற்று முல்லைத்தீவு அளம்பில் உடுப்புக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இம்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உடுப்புக்குளம் பகுதியிலுள்ள தாமரைக்குளமொன்றில் ஆலயத்துக்குத் தாமரைப் பூ பறிப்பதற்காக அளம்பிலைச் சேர்ந்த இருவர் தோணியொன்றில் சென்றிருந்தவேளை

15ஆம் பக்கம் பார்க்க

## ஆலயக் கேணியில் விழுந்த மாணவியர் இருவர் பலி

### செல்பி எடுத்தவேளை நடந்த சோகம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குமுழமுனைக் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயக் கேணியில் நேற்றைய தினம் செல்பி எடுக்க முயன்ற இரு மாணவிகள் கேணிக்குள் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளனர்.

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கின்ற

15ஆம் பக்கம் பார்க்க

# மீண்டும் கொரோனா எச்சரிக்கிறது அரசு

### மாஸ்க் அணிய வேண்டி வரலாம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று (கொவிட் 19) இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## முன்னணியும் கூட்டணியும் நேற்று முக்கிய சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய

16ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தானந்த, நளின் அச்சகத்தில் வேலை

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கும் நளின் பெர்னாண்டோவிற்கும் வெலிக்கடைச் சிறைச்சாலையின் அச்சுப் பிரிவில் வேலை வழங்கப்பட்டுள்ளதாக வெலிக்கடைச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## 161 சபைகள் இன்று பதவியேற்பு

(கொழும்பு)

பொதுநிர்வாக மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில், பெரும்பான்மை அதிகாரம் கொண்டுள்ள 161 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே இன்று ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் பிரகாரம் 161 உள்ளூராட்சி மன்றங்

15ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர்ந்தவர்கள் நாடு திரும்பத் தடையில்லை

### சட்டச் சிக்கல்களை நீக்கவும் ஏற்பாடு அமைச்சர் விஜயபால தெரிவிப்பு



(கொழும்பு)

அசாதாரண சூழல்களால் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவிதமான தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை என்று பொதுமக்கள்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மாநகர சபையில்

## முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கான முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதியாக பாத்திமா றிஸ்லா என்ற ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தேசிய வரி வாரம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய வரி வாரம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

இதன் தொடக்க விழா ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரசர்மாவின் மகன் அக்ஷய் உயிரிழந்தார்



(யாழ்ப்பாணம்)

ஓமந்தையில் கடந்த மே 26 ஆம் திகதி அதிகாலை வேளை இடம்பெற்ற கார் - டிப்பர் வாகன விபத்தில் படுகாயமடைந்த பிரபாகரசர்மா அக்ஷய் நேற்று இரவு சிகிச்சை

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நெறிநின்று காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு வன்னிவிளாங்குளம்

# அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம்

## ஆலய வருடாந்த பொங்கல் விழா

## 06.06.2025 வெள்ளிக்கிழமை

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

**அம்பிகை அடியார்களே!**

வன்னி விளாங்குளம் பதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 23 ம் நாள் **(06.06.2025) வெள்ளிக்கிழமை** வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். **இரவு 09.00** மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:-**

1) பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

2) பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

3) பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 04.06.2025 காலை 10.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து உரிய பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப் படுவீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

அனைவரையும் வருக வருகவென
அழைத்து நிற்கின்றோம்.

(C-3094)

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை,
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.**

# உரும்பிராயில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தெற்கில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று (01) காலை அவரது வீட்டிலிருந்து சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செல்யைா திருமாவளவன் (வயது 48) என்ற ஒரு பிள்ளையின் தந்தையென இனங்காணப்பட்டுள்ளது.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணையை மேற்கொண்டார். (ந-4,7)

## மீண்டும்...

அண்மையில் எல்ப்பிட்டியவில் உயிரிழந்த ஒன்றரை மாதக் குழந்தையின் உயிரியல் மாதிரிகள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது பிரஸ்தாபக் குழந்தை கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொரோனாத் தொற்றுத் தொடர்பான இரண்டு விசேட சுற்று நிருபங்களை சுகாதார அமைச்சு விரைவில் வெளியிடவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இச் சுற்று நிருபங்கள் மூலம் மீண்டும் பொதுமக்கள் முகக்கவசம் அணிய வேண்டி வரலாம் என அறியப்படுகிறது.

இதேவேளை இந்தியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் கொவிட் தொற்றுக்குள்ளான பலர் இனங்காணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4,7)

## தேசிய...

வரி சக்தி என்ற பெயரில் வரி வாரத்தை செயற்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதுடன், இன்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரையான வாரத்தில் வரி செலுத்துதல் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் பி.கே.எஸ். சாந்த தெரிவித்தார்.

இதனிடையே 10 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் யு.டி.என். ஜயவீர தெரிவித்தார். (ந-4,7)

# சண்டிலிப்பாயில் பெண்ணொருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இளம் குடும்பப் பெண்ணொருவர் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் 7 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மரணம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்த யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் சடலத்தினை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

அதன்பிரகாரம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் சுருக்கிட்டமையால் மரணம் சம்பவித்தமை உறுதி செய்யப்பட்டதோடு குறித்த பெண் ஐந்து மாதக் கர்ப்பிணியாகவும் இருந்துள்ளார்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-4,7)

# திருடப்பட்ட கலசங்கள் பொலிஸாரால் மீட்பு

அனலைதீவு ஐயனார் கோவிலில் திருடப்பட்ட பித்தளைக் கலசங்கள் ஊர்காவற்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் இருந்து 06 பித்தளைக் கலசங்கள் காணாமல் போயிருந்தன.

இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் தலைமையிலான குழுவினர் நேற்றையதினம் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்ததுடன் 06 கலசங்களையும் மீட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-4,7,104)


உளமார வாழ்த்துகின்றோம்

20 ஆம் ஆண்டு அகவை பூர்த்தியாகி
21 ஆம் அகவையில் காலடி பதிக்கும்
யாழ். மின்சார நிலைய வீதி,

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்

(உரிமையாளர் – என்.நித்தியானந்தன், நி.அருண்)
021 222 6953, 077 722 5310, 077 4905792

அவர்களை சிறப்புற உளமாற
வாழ்த்துகின்றோம். இன்று போல் என்றும்
எல்லோரும்போற்றிட, நல்லோர்
வாழ்த்திட, நல்லதே செய்து
நன்றே நிகழ்ந்திட, நல் வாழ்த்துக்கள்!



(4397)

வாழ்த்துபவர் : திரு.இ.ஸ்ரீதரன்,
நாச்சிமார் கோவிலடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாத காலத்துக்குள் அரசை குறைகூற முடியாது

## முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச தெரிவிப்பு



(கொழும்பு) ........................................

**நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆறு மாத காலத் துக்குள் அரசாங்கத்தை குறை கூற முடியாது என முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை தோற்றுவிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவும், ராஜபக்ஷர்களும் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை தோற்றுவிப்பதற்கான சூழலை ஏற்படுத்தினார்கள்.

நாடு வங்குரோத்து நிலையடைந்ததை தொடர்ந்து அரசியல் கட்டமைப்பு தொடர்பில் நாட்டு மக்கள் கடும் அதிருப்தியை கொண்டிருந்தார்கள். இவ்வாறான நிலையில் மாற்றீடு ஒன்று இல்லாத காரணத்தால் தான் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்நார்கள். ஜனநாயக ரீதியில் மக்கள் இந்த அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளார்கள்.

நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. சிறந்த தீர்மானங்களுக்கு அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஆறு மாத காலத்துக்குள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்க முடியாது. குறைகூற முடியாது.

ஊழல் மோசடியால் தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஊழலை இல்லாதொழிக்கவும், ஊழல்வாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கவும் 2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தை உரு வாக்கினோம். இந்தச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-8)

# அவுஸ்திரேலிய அமைச்சர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

அவுஸ்திரேலிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ், உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகிறார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருணா ஜெயசேகர உள்ளிட்டவர்களை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுப்பட உள்ளார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கல்வி, விளையாட்டு மற்றும் கலாசாரம் ஆகியவற்றில் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் ஒத்துழைப்பின் வரலாற்றைப் பகிர்ந்து கொள்வதுடன், இரு நாடுகளுக்கிடையில் 78 வருடகால இராஜதந்திர உறவுகள் உள்ளன.

அமைதியான, நிலையான மற்றும் வளமான இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் பொதுவான நலன்களை பாதுகாப்பதிலும் பொருளாதாரம், பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் உட்பட பரந்துப்பட்ட ஒத்துழைப்புகளின் அடிப்படையில் இருதரப்பு உறவுகள் வலுப்படுகின்ற நிலையில், பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களின் அடிப்படையில் அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# குழந்தைகளிடையே அதிகரிக்கும் நோய்த்தாக்கங்கள்

## விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

குழந்தைகளிடையே காய்ச்சல், சிக்குன்குனியா, டெங்கு போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இந்த நோய்கள் அதிகரித்துள்ளதாக வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா அறிகுறிகளுடன் குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், டெங்கு ஆபத்தானது என்றும், சிக்குன்குனியா உள்ள குழந்தைகள் நோய்வாய்ப்பட்ட பிறகு பல மாதங்களுக்கு மூட்டு வலியால் அவதிப்படுவார்கள் என்றும் சிறப்பு மருத்துவர் சுட்டிகாட்டியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் வயதானவர்களுக்கு சிக்குன்குனியா ஏற்பட்டால், அது ஆபத்தானது என்றும், இந்த நிலை கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தையையும் பாதிக்கலாம் என்றும் நிபுணர் சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்களில் இன்ஃப்ளூவன்ஸா நோயாளிகள் அதிகரித்து வருவதாகவும், இந்த நோய் குழந்தைகள் மத்தியில் வேகமாகப் பரவக் கூடும் என்பதாலும், பொது மக்கள் கவனம் செலுத்துமாறு சிறப்பு மருத்துவர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# அல்வாய் படுகொலையின்

## 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி பகுதியில் உள்ள அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த வடமராட்சி மக்கள் மீது குண்டு வீச்சு நடத்தி படுகொலை செய்யப்பட்டதன் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை சந்தை மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மைக்கல் விளையாட்டு கழகம், மைக்கல் நேசக்கரம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நினைவேந்தல் நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஈகைச் சுடரினை ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர். பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்த வடமராட்சி மக்கள் பெருமளவில் தஞ்சமடைந்திருந்த அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது 1987 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் நூற்றிற்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டும் பலர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரிக்கெட் போட்டிகளுக்கு புதிய நிபந்தனைகள்

## கிரிக்கெட் பேரவை அறிவிப்பு

International Cricket Council

கிரிக்கெட் போட்டிகளுக்கு இம் மாதம் முதல் புதிய விளையாட்டு நிபந்தனைகளை விதிக்கவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஒற்றைப் பந்து முறைமைக்குத் திரும்புவதும் புதிய நிபந்தனைகளில் அடங்கவுள்ளது.

இதன்படி, இம்மாதம் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலும் ஜூலை மாதம் முதல் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளிலும் புதிய நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகவுள்ள அவுஸ் திரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான உலக டெஸ்ட் சம்பியன் கிண்ண போட்டியுடன் புதிய நிபந்தனைகள் நடைமுறைக்கு வருவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-3)



கடந்த 2024 ஆம் ஆண்டு கிரிக்கெட் விளையாட்டில் சாதனை படைத்த முல்லைத்தீவு மாவட்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கான விருதுகள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் அமைந்துள்ள உதயா தனியார் விருந்தினர் விடுதி மண்டபத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தது. (படம்:- சதீஸ்)

# இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளிக்கும் இந்தியா

இந்திய அணியின் முன்னாள் பந்துவீச்சு பயிற்சியாளர் பரத் அருண், 2025 ஜூன் 2 ஆம் திகதி முதல் அனைத்து மட்டங்களிலும் உள்ள இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டத்தை நடத்தவுள்ளார்.

14 நாட்கள் நீடிக்கும் இந்த பயிற்சித் திட்டம், ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கு நடத்தப் படவுள்ளது.



இந்திய பயிற்சியாளர் ஒருவர் இலங்கைக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக, பயணம் செய்வது இது முதல் முறை அல்ல, முன்பும் கூட, ஆர் ஸ்ரீதர், இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுக்கான அமர்வுகளை நடத்தியுள்ளார்.இதேவேளை 62 வயதான பரத் அருண், இந்தியன் பிரீமியர் லீக்கில் கொல்கத்தா நைட் ரைடர்ஸின் பந்துவீச்சு பயிற்சியாளராகவும் பணியாற்றினார். (நி-3)

# சுவிஸ் கால்பந்தாட்டத்தில் கலக்கும் ஈழத்தமிழன்



சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் கால்பந்தாட்டப் போட்டிகளில் ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் இளைஞன் அபாரத்திறமைகளை வெளிப் படுத்தி வருகின்றார். இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட அஸ்வின் பாலரூபன் என்ற இளைஞரே இவ்வாறு கால்பந்தாட்டப் போட்டிகளில் திறமைகளை வெளிப் படுத்தி வருகின்றார்.

ஐரோப்பிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுவிஸ் செலன்ஜ் லீக் கால்பந்தாட்டப் போட்டித் தொடர் சுவிட்சர்லாந்தில் இடம் பெற்று இருந்தது. இப் போட்டித் தொடரில் எப்.சீ.துன் கழகத்தின் சார்பில் அஸ்வின் விளையாடியிருந்தார். அத்துடன் இறுதிப் போட்டியில் எப்.சீ.துன் கால் பந்தாட்டக் கழகமே சம்பியன் பட்டத்தையும் வென்றது. இவ் வெற்றிக்கு அஸ்வின் வழங்கிய பங்களிப்பு அனைவரா லும் பாராட்டப்பட்டுள்ளது.

இவை மட்டுமன்றி சுவிட்சர்லாந்தில் இடம்பெற்று வரும் பல்வேறு கழக மட்டப் போட்டிகளிலும் அஸ் வின் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-3)

## சீரற்ற காலநிலை

# இலங்கை கிரிக்கெட் சபை அதிரடி அறிவிப்பு




நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக, இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ள அனைத்து உள்நாட்டு போட்டி களையும் ஒத்திவைக்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

அதன்படி, பிரதான கழக ரி-20 சுற்றுப்போட்டி, பி அடுக்கு ரி-20 சுற்றுப்போட்டி மற்றும் ஆளுநர் கிண்ண சுற்றுப் போட்டி ஆகியவை ஒத்திவைக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருத்தப்பட்ட அட்டவணைகள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற வானிலையால் 10,270 பேர் பாதிப்பு



(கொழும்பு)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 14 மாவட்டங்களைச் சேர்ந்த 140 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2,757 குடும்பங்களைச் சேர்ந்த 10,270 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நிலவும் சூழ்நிலையில் 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கைகளை வெளியிட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பெய்து வரும் பலத்த மழையை கருத்தில் கொண்டு நாடு முழுவதும் உள்ள பல நீர்த்தேக்கங்களில் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக அவர் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

# பொங்கல் விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வன்னி விளாங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் இடம்பெற்று, இரவு 9 மணியளவில் மடைப்பண்டம்எடுக்கும் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதென ஆலய திருப் பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர். (ஙி-3-8)



நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான தேவி மஹோற்சவம் நேற்று காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படம்–சிவசாந்தன்)

# போதைப்பொருட்களுடன் மூவர் கைது

(கொழும்பு)

ஹல்துமுல்ல, உவ தென்ன பகுதியில், சுமார் இரண்டு மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஐஸ் போதைப் பொருள் தொகையுடன், சந்தேகத்திற்கிடமான இளம் தம்பதியினர் நேற்று ஹல்துமுல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், 19 வயதுடைய இளைஞர் ஒருவரும் 20 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை , வெயங்கொட -புஞ்சி நைவலவத்த பகுதியிலும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஙி)


## NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் **30/04/2024** இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு, கீழ்குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 19.06.2025 தொடக்கம் 27.06.2025 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவுத் திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெற உள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம், சாவகச்சேரி | 24.06.2025 | 26.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி. |
| 02. | முல்லைத்தீவு, கிளிநொச்சி மல்லாவி, வவுனியா. | 22.06.2025 | 24.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சி |
| 03 | காரைநகர், சங்கானை, மானிப்பாய், ஊர்காவற்றுறை | 18.06.2025 | 20.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய் |
| 04. | நெல்லியடி,அச்சுவேலி, பருத்தித்துறை | 25.06.2025 | 27.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை |
| 05 | மன்னார், வங்காலை | 17.06.2025 | 19.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 06. | யாழ்ப்பாணம், சுன்னாகம். யாழ்ப்பாணம் II ம் கிளை திருநெல்வேலி, கோப்பாய். | 19.06.2025 | 21.06.2025 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**வடபிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி** (சி-3093)


# இராசிபலன்

**02.06.2025**
**வைகாசி 19, திங்கட்கிழமை**
**சப்தமி பின்னிரவு 1.20 மணிவரை**

**மகம் பின்னிரவு 3.26 மணிவரை**
**சுபநேரம் 11.52-1.22 மணிவரை**
**இராகுகாலம் 7.22-8.52 மணிவரை**

**சந்திராஷ்டமம்- உத்தராடம்**

**வளவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும்,சந்தித்தவர்களால் சந்தோசம் குடிகொள்ளும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புடன் நடந்து கொள்வர்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,விருந்தினர்களின் சந்திப்குகள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.




இழுபறியாக இருந்த காரியங்களில்முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்,புதியபொருள் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பச் சுமை கூடும்,அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்,உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் வளர்ச்சி கூடும், கௌரவமான நாள்.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்,வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்,வேலைகள் உடனுக்குடன் முடியாது தாமதமாகலாம்,கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு,வருமானம் திருப்தி தரும்.




உடல் நலனில் இருந்த பாதிப்புகள் விலகும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்த மகிழும் வாய்ப்புண்டு.

**அறியாமை ஒரு நாகரிகமில்லாத விருந்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கை மேம்படுத்துவதில் எமது அரசாங்கம் உறுதியாகவுள்ளது

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் மக்கள் மத்தியில் முதலில் நாடு தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எமது ஆட்சிக் காலத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பில், 'யாழ்ப்பாணம் முதலீடு மற்றும் வர்த்தக மன்றம் - 2025' தலைப்பிலான கலந்துரையாடல் அரியாலை தனியார் விடுதி ஒன்றில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு:

"வடக்கை மேம்படுத்துவதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். அண்மையில் யாழ். சென்ற போது அங்கு என்ன செய்ய வேண்டும் என ஜயசூரிய கேட்டார். சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறினார்.

இப்படி வடக்கு குறித்து பல வழிகளிலும் சிந்திக்கப்படுகின்றது. எவ்வித பிரிவினையும் இன்றி அனைத்து மக்களுக்கும் சம உரிமை என்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். முதலீட்டாளர்கள் வடக்குக்கு வரவேண்டும். இங்குள்ள துறைகளில் முதலீடுகளை செய்ய வேண்டும். இங்கு வந்துள்ள முதலீட்டாளர்களுக்கும் இந்த அழைப்பை விடுக்கின்றேன்.

புலம்பெயர் தமிழர்கள் இது தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும். முதலீட்டாளர்கள் பாது காக்கப்படுவார்கள். அவர்களுக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

தமிழ் மக்களின் இருப்பு பற்றி கவலை வெளியிடுகின்றனர். இங்குள்ளவர்கள் வெளி நாடுகளுக்கு செல்வதால்தான் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. எனவே, இலங்கை நம்பிக்கையான நாடுதான் என்ற நம்பிக்கையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்" என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், இலங்கை -கனடா வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (நி-8)

## பேராசிரியராகப் பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப் பட்டுள்ளார். விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம் பெற்றது. பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப் படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரன் பௌதிக வியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (நி-8)






யாழ்ப்பாணம் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டு 44 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, நேற்று ஞாயிற்றுக்கிழமை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாண நூலகத்தில், மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் , மாநகர சபை ஆணையாளர் , பொது நூலக நூலகர், நூலக உத்தியோகத்தர்கள் , வாசகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்ட செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTADதர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/Imp /25/1111-10 | Renovation of Gents Summary Quarters (No-2) at District Secretariat, Kilinochchi | 16 மில்லியன் | C7, Building | ரூபா. 240,000/- 29.09.2025 வரை | 5000.00 |
| 2 | KN/EB/13/Imp /25/1111-11 | Painting & Repairing Works in Two Storey M.S.O Family Quarters at District Secretariat, Kilinochchi | 8.4 மில்லியன் | C8, Building | ரூபா. 126,000/- 29.09.2025 வரை | 3500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான் நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரைப் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-021 228 5663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை **03.06.2025** ஆம் திகதியிலிருந்து **16.06.2025** ஆம் திகதி வரை முற்பகல் **9.00** மணி முதல் பிற்பகல் **3.00** மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) **13.06.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு **17.06.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாகத் திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாகக் கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன்,**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## ரவிகரன் எம்.பி வலியுறுத்தல்



(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப் பட்டோர் விவகாரத்தில் முன்னைய இனவாத அரசுகள்செயற்பட்டதைப்போல தற்போதைய அரசும் செயற்படாது, காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு உரிய நீதியை வழங்க புதிய அரசு முன்வர வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக் கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் முல்லைத் தீவு மாங்குளம் பகுதியில் 3007 ஆவது நாளில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவத்திடம் கையளித்த உறவுகளை, மீளக் கையளிக்குமாறு அவர்களின் உறவுகள் தொடர்சியாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு கையளிக்கப் பட்டு, கைதுசெய்யப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீளக்கையளிக்குமாறு கோரும் அவர்களது உறவுகளை அரசாங்கங்கள் தொடர்ந்து ஏமாற்றிவருகின்றன. இந்த நிலை மாறவேண்டும் .

நாங்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தபோது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு நீதி வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைத்தோம். இருப்பினும் இதுவரை சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் புதிய அரசாங்கமும் கடந்த அரசாங்கம் செயற்பட்டதைப்போன்று செயற்படாமல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான உரிய நீதியை வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# இலவச சட்ட ஆலோசனை முகாம்



(மன்னார்)

சட்டரீதியான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியாத மக்களின் பிரச்சினைகளுக்கான ஆலோசனை வழங்கும் இலவச முகாம் ரைட்டு லைப் நிறுவனம் ஏற்பாட்டில் கட்டையடம்பன் பகுதியில் மன்னார் மாவட்ட மனித உரிமைகள் முதலுதவிமையத்தின் மாதாந்த இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொது மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை மற்றும் சட்ட உதவிகள் மன்னார் மாவட்டசட்டத்தரணிகளான; சுதர்சனா மற்றும் ஜப்சன் பீரிஸ் ஆகியோரால் வழங்கப்பட்டது.

இந்த ஆலோசனை முகாமில் சட்டத்தரணிகள் உட்பட மன்னார் மாவட்ட முதலுதவி மையத்தின் மாவட்ட இணைப்பாளர் டிலக்சன் மற்றும் இணைச் செயற்பாட்டாளர்களான விஜிதன் டிலோஜன் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். (8-285)


# மக்கள் தொடர்பு காரியாலயம் முல்லையில் திறந்து வைப்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத் துக் குழுத் தலைவரின் மக்கள் தொடர்பு காரியாலய திறப்பு விழா முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கூட்டுறவு பிரதி அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் குறித்த காரியாலயத்தினையும் திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திலகநாதன், காதர் மஸ்தான், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன்(நிர்வாகம்), மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயகாந்(காணி), மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், உதவி அரசாங்க அதிபர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)





வரலாற்று பிரசித்தி பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

திருக்கோணேச்சர ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறையில் எடுத்து வரப்பட்ட தீர்த்தம் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்ததைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம் பெற்றது.

(படங்கள்-ஜோசப்நயன்)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




கலாநிதி
தங்கராசா ஜீவராஜா

பல தலைமுறைக்கு அறிவொளி தந்து
மாணவர்களின் வளர்ச்சியை
தம் உயர்வாக எண்ணி
இரு தசாப்தங்களாக ஆசிரியர் பணியாற்றி
02.06.2025 இன்று
பதவி உயர்வு பெற்று
இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர்
சேவையில் இணைந்து கொள்ளவிருக்கும்
கலாநிதி. தங்கராசா ஜீவராஜா
அவர்கள் மேலும் பல உயர்
பதவிகளைப் பெற்று சீரும் சிறப்போடும்
வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

(4419)

வாழ்த்துவோர்,
பாடசாலைச் சமூகம்
கிளி/இயக்கச்சி [illegible]


# சந்தைகளில் நேற்றைய விலை




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 280 | 450 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 150 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 350 | 350 | 600 |
| தக்காளி | 700 | 750 | 800 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 240 |
| கோவா | 450 | 500 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 950 | 800 | 750 | 1000 |
| பூசணி | 160 | 180 | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 220 | 250 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 60 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 1000 | 700 | 650 | 800 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 100-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 350 | 200 | 200 | 400 |
| பயற்றங்காய் | 200 | 400 | 100 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 450 | 450 | 600 |
| கறிமிளகாய் | 650 | 800 | 400 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 1000 | 1000 | 1000 | 1500 |
| போஞ்சி | 400 | 550 | 550 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 200 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 100-160 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 100-220 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 600 | 700 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| [illegible] | -- | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா தொற்று




(டில்லி)

இந்தியாவில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தை கடந்துள்ளது.

கேரளா, மகாராஷ்ட்ரா, டில்லி ஆகிய மாநிலங்களில் கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் 1,147 பேரும் மகாராஷ்ட்ராவில் 424 பேரும் டில்லியில் 294 பேரும் தமிழகத்தில் 148 பேரும் குஜராத்தில் 223 பேரும் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதுவரை இந்தியாவில் 07 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

ஹொங்கொங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் கொரோனா மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## சரிந்தது பனிப்பாறை புதைந்தது கிராமம்

### சுவிட்சர்லாந்தில் அதிர்ச்சி சம்பவம்

(ஜெனீவா)

புவி வெப்பமடைதல் காரணமாக, பனிப்பாறை சரிந்து, சுவிஸ் நாட்டின் மலை கிராமமான பிளாட்டன் புதைந்துள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின் வாலேஸ் அருகே பனி மலைச் சிகரங்கள் பல அமைந்துள்ளன. அப்படி பனிமலைகளின் மடியில் அமைந்துள்ளது பிளாட்டன் என்ற அழகான கிராமம்,

இந்த சிகரத்தின் உச்சியில் இராட்சத பனிப்பாறை ஒன்று வெகுநாட்களாக தொடர்ந்து உருகி வருகின்றது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அந்த இராட்சத பனிப்பாறை பயங்கரச் சத்தத்துடன் மலை வழியாக வேகமாக சரிந்தது.



தொடர்ந்து அந்தப் பனிப்பாறை முழுவதுமாக சரிந்து அடிவாரத்திற்கு வந்தது. இதன் காரணமாக மலை அடிவாரத்தில் இருந்த ஆல்பைன் என்ற கிராமம் பனிப்பாறைகள் மற்றும் பனிக்குவியல்களால் முழுவதுமாக மூடியது.

இது சுவிட்சர்லாந்தில் பதிவான மிகப்பெரிய பனிச்சரிவுகளில் ஒன்றாகும். இதனால் 90% கிராமம் அழிந்து போனது. பனிப்பாறையின் நிலைமாற்றத்தை உணர்ந்து முன்னதாகவே அங்கு வசிக்கும் 300இற்கும் மேற்பட்ட மக்களையும் கால்நடைகளையும் அதிகாரிகள் பாதுகாப்பாக வெளியேற்றி யிருந்தனர். இதனால், உயி ரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. இடிபாடுகளில் 64 வயது நபர் காணாமல் போயுள்ளார். அந்த கோர நிகழ்வின் போது, 3.1 என்ற ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உருவானது. பனிப்பாறையின் அடிப்பகுதி உருகியது மற்றும் பாறைகளின் சிதைவால், இப்படி நிகழ்ந்திருக்கலாம் என்றும், இது பருவ நிலை மாற்றத்தின் விளைவாக நடந்திருக்கலாம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். (நி-8)

## கல் குவாரியில் பாறை சரிந்து விபத்து 14 பேர் உயிரிழப்பு

### இந்தோனேசியாவில் துயரம்



(யகார்த்தா)

இந்தோனேசியாவின் ஜாவா மாகாணத்தின் சிரேபன் நகரத்தில் சுண்ணாம்புக்கல் குவாரியில் பாறையொன்று சரிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


வழமைபோன்று கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கல் குவாரியில் தொழிலாளர்கள் பலர் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, பாறைகள் சரிந்து வீழ்ந்தன. இதன்போது அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் மற்றும் ஏராளமான இயந்திரங்கள் பாறைகளுக்குள் அகப்பட்டுக்கொண்டன.

இச்சம்பவத்தில் 14 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் பலத்த காயங்களுக்குள்ளான பலர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கல் குவாரி சட்டப்படி உரிய அனுமதிகள் பெற்று இயங்கி வந்தாலும், அங்கு போதுமான பாதுகாப்பு வசதிகள் இல்லையென மேற்கு ஜாவா ஆளுநர் டெடி முல்யாடி தெரிவித்துள்ளார். (நி-8)

## நைஜீரியாவில் வெள்ளம் மூழ்கிய மோக்வா நகரம்

### 111 பேர் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழப்பு



(நைஜர்)

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் பருவமழை காரணமாக அந்த நாட்டின் மோக்வா நகரம் வெள்ளத்தில் மூழ்கியதில் 111 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜர் மாகாணத்திலுள்ள மோக்வா நகரம் வியாபாரிகள் ஒன்றுகூடும் முக்கிய சந்தையாகும். மோக்வா நகருக்கு அருகில் உள்ள அணை உடைந்ததால், நகருக்குள் வெள்ளம் புகுந்து அங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி ஏராளமானவர்கள் உயிரிழந்துள்ளனர். கன மழையால் பாதிக்கப்பட்ட பலர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இது வரை 111 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து நடைபெற்று வரும் தேடுதல் நடவடிக்கைகளில் மேலும் பல சடலங்கள் மீட்கப் படலாம் என்றும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பருவமழை காலங்களில் வெள்ளப் பாதிப்புகளை நைஜீரியா அடிக்கடி சந்தித்துவருகிறது. இதில் நைஜர் மற்றும் பெனுயூ நதிக் கரைகளில் வசிப்பவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் பருவ மழை காரணமாக நைஜீரியாவின் மைடுகுரி நகரில் இதே போன்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 30 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# போர் நிறுத்த திட்டத்தை ஏற்காவிட்டால் அழிவு நிச்சயம்!

## ஹமாஸை எச்சரிக்கும் இஸ்ரேல்

(ஜெருசலேம்)

**அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் முன்வைத்த காசா போர் நிறுத்த திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் வலியுறுத்தியுள்ளார். இல்லையெனில் ஹமாஸ் அழிவை சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



மேலும் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் வரை காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் முழுப்பலத்துடன் தொடரும் என்றும், இராணுவ வீரர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இஸ்ரேல் கடுமையான வான், தரை மற்றும் கடல்வழித் தாக்குதல்களை தொடரும் எனவும் இஸ்ரேல் காட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக அமெரிக்கா முன்வைத்த புதிய செயற்றிட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், ஹமாஸும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்று கொள்ள வேண்டும் என இஸ்ரேல் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## உணவு விநியோகப் பகுதியில் தாக்குதல் நடத்திய இஸ்ரேல்

✶ 26 பாலஸ்தீனியர்கள் பலி

✶ 150 பேர் காயம்



(ஜெருசலேம்)

காசாவின் ரஃபாவில் உணவு விநியோக நிலையத்திற்கு அருகில் இஸ்ரேலிய டாங்கிகள் மேற்கொண்ட தாக்குதலில் 26 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 150இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்கா ஆதரவுடனான மனிதாபிமான உதவிப் பொருட்கள் விநியோகிக்கப்படும் நிலையத்திற்கு அருகில் ஆயிரக் கணக்கான பாலஸ்தீனியர்கள் உணவுகளை பெறு வதற்காக காத்திருந்த வேளை அந்தப் பகுதியை நோக்கிவந்த இஸ்ரேலிய டாங்கிகள் தாக்குதலை மேற்கொண்டன என உள்ளூர் ஊடக வியலாளர் ஒருவர் பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களினது உடல்களையும் காயமடைந் தவர்களையும் கழுதை வண்டிகளில் செஞ்சிலுவை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதை காண்பிக்கும் படங்கள் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

பெருமளவு பாலஸ்தீனியர்கள் அல்அலாம் சுற்று வட்டத்தில் காணப்பட்டவேளை இஸ்ரேலிய டாங்கிகள் தாக்குதலில் ஈடுபட்டன என உள்ளூர் ஊடக வியலாளர் தெரிவித்துள்ளார். கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் நீண்டநேரம் நிலத்தில் விழுந்த நிலையில் காணப்பட்டனர்.

இஸ்ரேலிய படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அந்த பகுதிக்கு மீட்பு பணியாளர்கள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது என தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக மக்கள் கழுதை வண்டிகளைப் பயன்படுத்தி காயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

26 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 150இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் செஞ்சிலுவை மருத்துவமனை தெரிவித்துள்ளது. (நி)

## 72 ஆவது உலக அழகியாக தாய்லாந்து பெண் தெரிவு




(தாய்பே)

72ஆவது உலக அழகியாக தாய்லாந்தைச் சேர்ந்த ஓபல் சுச்சாட்டா சுவாங் ஸ்ரீ மகுடம் சூட்டப்பட்டார்.

இந்தியாவின் தெலுங்கானாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதிப்போட்டியின்போது, அவர் உலக அழகியாக மகுடம் சூட்டப்பட்டார்.

எத்தியோப்பியாவை சேர்ந்த ஹசேட் டெரேஜே அட்மாசு இரண்டாவது இடத்தை பிடித்தார். தெலுங்கானாவில் கடந்த ஒரு மாத காலமாக இது தொடர்பான திறன் காண் போட்டிகள் இடம் பெற்றுவந்தன.

இதில், உலகம் முழுவதிலுமிருந்து 108 போட்டியாளர்கள் அதிவேக கலாசார, சவால்கள் மற்றும் நோக்கம் சார்ந்த முயற்சிகளில் பங்கேற்றனர்.

இலங்கையின் அனுதி குணசேகரவு இந்தப் போட்டியில் பங்கேற்றார். அவர், பல்ஊடகம் மற்றும் நேரடிப் போட்டிகளில் வலுவான நிலையில் இருந்தபோதும், ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் அமெரிக்காவிலிருந்து தெரிவான காலிறுதிக்கான 40 பேரில் அவர் தெரிவாகவில்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசின் பிரதேச சபை உறுப்பினர்கள் கிளிநொச்சியில் சத்திய பிரமாணம்



(குருமபுரம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிட்டு கரைச்சி, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சம்பிரதாயபூர்வ சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுக் காலை, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கிருஷ்ணபிள்ளை சின்னராஜா, ஓய்வுநிலை அதிபரும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினருமான நாகலிங்கம் சோதிநாதன் ஆகியோர் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(8-316)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1983- இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>11இல் சூரி செவ்<br>கி-பா- 5 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L,அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ : B/15556 | பிறப்பு-2002-NRC<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS(3 rd year)<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer,Lecturer<br>தொ.இ:G/15572 |
| பிறப்பு:1984-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி-பா-72<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BA சமுநல அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15558 | பிறப்பு-1997-RC<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்: 5'2"<br>தகைமைஃதொழில்: Doctor(France)<br>எதிர்பார்ப்பு: Doctor ,Engineer (வெளிநாடு)<br>தொ.இ:G/15573 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>7இல் செவ்<br>உயரம்:6"<br>தகைமை/தொழில் :BSc(QS),Financial<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/15559 | பிறப்பு-1989-இந்து<br>நட்சத்திரம்- அச்சுவினி<br>கி.பா -32 1/2<br>உயரம்-5"<br>தகைமை/தொழில்: BA,Home Maker<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்,விவாகரத்தானவர்(வெளிநாடு)<br>தொ.இ:G/15574 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor (ஜேர்மனி)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/15560 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு- Doctor,Engineer ,வெளிநாடு<br>தொ.இ: G/15578 |
| பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/15562 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>7 இல்செவ்<br>கி.பா -63<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்-BSc, MSc, Accounting & Administration(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15734 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 385

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## பாராட்டப் பழகுங்கள்!

பாராட்டுவது ஒரு நல்ல பழக்கம். அதைப் பழகிக்கொள்வது நல்லது. அடுத்தவர்கள் பெயரிலே நமக்குப் பிரியம் இருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்துகொள்கின்ற மாதிரி நாம் நடந்து கொள்ள வேண்டும். சரி. பாராட்டுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன் சேர். யாரைப் பாராட்ட சொல்கிறீர்கள்?" -என்று கேட்க்கின்றீர்களா? முதலில் உங்கள் வீட்டிற்குள்ளேயே இதை ஆரம்பியுங்கள்.

மனைவி, மக்கள், குடும்பத்திலே உள்ள மற்றவர்கள் மற்றும் நண்பர்கள். போன்றவர்களை நன்றாக கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் அவர்களிடம் பாராட்ட வேண்டிய அம்சம் ஏதாவது கண்ணில் படும். அதைக் கண்டுபிடித்து பாராட்டுங்கள்.சிகை அலங்காரம், போட்டுருக்கின்ற உடை இப்படி ஏதாவது இருக்கும், புதிதாக ஏதாவது வாங்கியிருக்கின்றாரா நல்ல காரியம்ஏதாவது செய்திருக்கிறாரா என்று கண்டுபிடித்துப் பாராட்டுங்கள்.

பாராட்டப்படுபவர் முகத்தில்ஏற்படுகின்ற மலர்ச்சியைக் கவனியுங்கள் அது உங்கள் மனதையும் சந்தோஷப்படுத்தும். நீங்கள் ஒரு அதிகாரியாக ,உங்களிடம் வேலை பார்க்கின்றவர்களை நன்றாக கவனியுங்கள் சரியான சந்தர்ப்பம் பார்த்து அவரது முதுகிலே தட்டிக் கொடுங்கள். விவரம் தெரிந்த அதிகாரி முதுகில்தட்டுவதற்கு சந்தர்ப்பத்தைக் கண்டு பிடிப்பார். விவரம் தெரியாத அதிகாரி தலையிலே தட்டுவதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருப்பார். முதுகிலே தட்டினால் இரண்டு பேருக்குமே சந்தோஷம்! தலையிலே தட்டினால் தட்டுறவருக்கு மட்டும் தான் சந்தோஷம்.

ஒருத்தரை சந்திக்கும் போது முகமலர்ச்சியோடு "ஹலோ" சொல்லுங்கள். அவரைப் பார்ப்பதிலே உண்மையாகவே சந்தோஷப்படுங்கள்.உங்கள் புன்னகை அவரை உற்சாகப்படுத்தும். அடுத்தவர்கள் பெயரையெல்லாம் நன்றாக ஞாபகத்திலே வைத்துக்கொள்ளுங்கள். அதைச்சரியாக சொல்லிக் கூப்பிடுங்கள். அதுவே ஒரு பெரிய விடயம். நான்கு, ஐந்து நபர்களுடன் சேர்ந்து இருக்கும்போது,இன்னொருவருடைய பலவீனங்களைப் பற்றி கிசுகிசுக்கக் கூடாது. ஒருவரைப் பற்றி நல்ல விதமாக சொல்லுவதற்கு ஏதும் இல்லையா? என்றால் அது மாதிரி சந்தர்ப்பங்களிலே சுத்தமாக எதையுமே சொல்லாமல் இருப்பது தான் நல்லது.

உங்கள் எதிரிலே இருக்கின்றவர் தான் ஒரு முக்கியமான நபர் என்று உணர்ந்து கொள்கின்ற அளவுக்கு நீங்கள் நடக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களிலே உங்கள் தரத்திற்கு வராத சில நபர்களிடம் பேச வேண்டியிருக்கும். பல விதங்களிலே அவர்கள் உங்களை விட தாழ்ந்தவர்களாக இருக்கலாம்.அப்படிப்பட்டவர்களிடம் பேசும்போது நீங்கள் பொறுமையாக இருக்கவேண்டும். உனக்கு என்ன தெரியும்என்பது போல அவர்களிடம் பேசக்கூடாது.

நமக்காக மற்றவர்கள் ஏதாவது செய்தால்அது எவ்வளவு சின்ன காரியமா இருந்தாலும். மறக்காமல்நன்றி சொல்லவேண்டும் அல்லது ஒரு நன்றிக் கடிதமாவது எழுதவேண்டும் என்னதான் பெரிதாக செய்துவிட்டான். இதற்குப்போய் நன்றி சொல்லிக்கொண்டு என்று நினைக்க கூடாது. நன்றி மறப்பது நல்லதில்லை என்று இல்லாததை அன்றைக்கே மறந்துவிடுவது நல்லது என்கிறார் வள்ளுவர்.

எப்பவும் நாம் அடுத்தவர்களுக்கு உதவியாக இருப்பதற்கு ஆசைப்படவேண்டும்.அடுத்தவர் எப்போது நமக்கு உதவியாக இருப்பார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்க கூடாது. பாராட்டும் குணம் உள்ளவர்களைப் பாருங்கள் அவர்கள் சமூகத்திலே கௌரவமாக இருப்பார்கள். திட்டுகின்ற ஆசாமிகளைப் பாருங்கள். அவர்கள் உடம்பும் நன்றாக இருக்காது , முகமும் நன்றாக இருக்காது.

அடுத்தவர்களோடு நன்றாக பேசத்தெரிந்தவர்களுக்கு எப்போதும் பேரும் புகழும் இருக்கும். அடுத்தவர்களுடன் நன்றாக கேட்கத் தெரிந்தவர்களிடம் அதைவிட அதிகமான பேரும் புகழும் இருக்கும். இந்தக் காலத்திலே பாராட்டுவது எப்படி இருக்கின்றது என்றால் ஒருத்தரை நேருக்கு நேராக பார்த்துப் பாராட்டுவது இல்லை. அதற்குப் பதிலாக ஒரு பெரிய பாராட்டு விழாவாக நடத்துவது. பாராட்ட வேண்டியவரை பக்கத்திலே உட்கார வைத்துக் கொண்டு எதிரிலே இருக்கிற கூட்டத்தைப் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பது நம் பழக்கம்.

ஒரு இடத்திலே ஒரு பெரியவருக்கு பாராட்டுவிழா நடத்துவதற்காக பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கே வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் இரவு பகலாக கஷ்டப்பட்டு பந்தல் போட்டு வண்ணத் தோரணம் எல்லாம் கட்டி முடித்துவிட்டு அப்பாடா என்று முகத்தைத் துடைத்துக்கொண்டு உட்கார்ந்தார். பின்பு சொன்னார்: "இந்தக் காலத்திலே ஒருவருக்கு பாராட்டு விழா நடத்த வேண்டும் என்றால் யாரும் தாராளமாக முன் வரமாட்டார்களாம் சேர்... பாராட்டும் பண்பு வளர வேண்டும் சேர்!" அப்படி என்றார். "இவ்வளவு கஷ்டப்பட்டு பந்தல் போட்டிருக்கிறீர்களே.. நாளைக்கு இங்கே யாருக்கு சேர் பாராட்டுவிழா? என்று கேட்டார்கள். "வேறு யாருக்கு சேர், எனக்குத்தான்" என்று சொல்லிவிட்டு அலட்சியமாக துண்டை உதறி தோளிலே போட்டுக்கொண்டு அங்கே இருந்து அசதியாகநடந்து போனார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரங்களில் திருத்தம் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


நேற்று முதல் அமுலாகும் வகையில் தேசிய பொலிஸ் ஆணைக் குழு வினால் குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதிபொலிஸ்மா அதிபர்களுக்கு, அதற்கு கீழ் உள்ள பதவிநிலைகளில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு அதிகாரிகளை பதவி களில் இருந்து நீக்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (நி)



நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (அம்பாள்) ஆலய வருடாந்த மஹோற்சவ கொடியேற்றத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது.

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஓவியப்போட்டி



(முல்லைத்தீவு)

தேசிய சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர் மத்தியில் சுவரொட்டி ஓவியப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி என்பன முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.


மாணவர்களுக்கான சுவரொட்டி ஓவியப் போட்டி (வயதுப் பிரிவு 8,9,10) "பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவோம்" எனும் தலைப்பிலும் பேச்சுப் போட்டி (வயதுப் பிரிவு 11,12,13) "இயற்கையைக் கெடுக்கும் பிளாஸ்டிக்கிற்கு முற்றுப்புள்ளி வைப்போம்" எனும் தலைப்பிலும் இடம்பெற்றது.

இப்போட்டிகளில் முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் வலயங்களைச் சேர்ந்த பல பாடசாலை மாணவ விகள் ஆர்வத்துடன் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அத்திப்பழம்



Botanical Name- Ficus Carica

Family - Moraceae

சுவையான , ஊட்டச்சத்துக்கள் நிறைந்த போசாக்கான பழமே அத்திப்பழமாகும். அத்திப் பழத்தில் அதிகளவு நார்ச்சத்து, இரும்புச்சத்து, கல்சியம், மக்னீ சியம் போன்ற அதீத சத்துக் களைக் கொண்டிருக்கும். உடல் எடையைக் குறைப்பதற்கும் மலக் கட்டு வராமல் தடுப்பதற்கும் மேலதிகமாக சாப்பிடுவதைத் தடுப் பதற்கும் நார்ச்சத்து மிகவும் அவசியம்.

அத்திப்பழத்தில் இருக்கும் இரும்புச்சத்தானது குருதிச் சோகை வராமல் தடுக்கக் கூடியது. இதிலிருக்கும் கல்சியம் சத்துக்கள் என்புகளைப் பாதுகாப்பாக வைத் திருக்க அவசியமாகின்றது. இதில் இருக்கும் பொட்டாசியம் சத்தானது இரத்தக் கொதிப்பைக் கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்க அவசியமாகின் றது. நீரிழிவு நோயாளிகளுக்குப் பொது வாக உலர் கனிகளைப் பயன் படுத்துவது தவிர்க்கப்படுகிறது. ஏனெனில் ரத்தத்தில் சீனியின் அளவை அதிகரிக்கச் செய்கிறது. பாதுகாக்கும் பொருட்களோ (Preservatives) இல்லாத Organic dry fig fruits இனை நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்த லாம். அத்திப்பழத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் அத்திப் பழமானது உடம்பில் இன்சுலின் நன்றாக செயற்படுவதற்கு (respones) அத்திப்பழம் உதவு வதாக ஆய்வு முடிவுகளும் தெரி விக்கின்றன.

மூல வியாதி உடையவர்கள் உலர்ந்த அத்திப்பழங்கள் 3, 4 இனை எடுத்து 200 மில்லி நீரில் இரவு முழுவதும் ஊறவிட்டு அடுத்த நாள் காலை அந்த நீரை வடித்துக் குடித்து அத்திப் பழங்களையும் சாப்பிட்டு வர மூல நோயிற்கு சிறந்த பலனைக் கொடுக்கும்.

நாம் எமது உணவில் அதிக அளவு உப்பு எடுக்கக் கூடாது. அதிக உப்பானது உடம்பில் இருக்கும் கல்சியத்தினை சிறுநீருடன் வெளியேற்றி விடும். இந்தக் கல்சிய இழப்பைத் தடை செய்வதற்கு அத்திப்பழத்தில் இருக்கும் பொட்டா சியம் பயன்படுகிறது. அத்தோடு கல்சியம் இழக்கப்படு வதைத் தடுப்பதோடு மட்டு மல்லாது சிறுநீரில் இருக்கும் மேலதிக யூரிக்கமிலம் மற்றும் நச்சுக்களையும் உடம்பில் இருந்து வெளியேற்றுகிறது. அத்திப்பழமானது பாதுகாப்பான எல்லோரும் எடுக்கக் கூடிய ஒரு பழமானது.

ஒரு சிலருக்கு ஒவ்வாமை இருந்தால் அவர்கள் மட்டுமே தவிர்த்துக்கொள்ள வேண்டும். மற்றும் யாராவது அறுவை சிகிச்சை செய்து, மருந்து எடுத்துக் கொண்டு இருப்பவர்களானால் முதல் மூன்று வாரம் அத்திப்பழம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அரிதாக இரத்தப் போக்கை (Bleeding) ஏற்படுத்தப் பார்க்கும். அத்திப்பழத்தை தோலை நீக்கி உள் இருக்கும் சதைப்பகுதியை சாப்பிட வேண்டும். உள்ளே பூ தேனுடன் இருக்கும்.

இதுவே தேனின் சுவையைப் போன்ற இனிப்புச் சுவையைப் கொடுக்கிறது. இதனால் உணவு நன்கு ஜீரணமாகும். கெட்ட கொழுப்பு குறையும். இரதத்தில் சீனியின் அளவை சீராக பேண உதவும். புற்று நோய்க் கலங்களை அழிக்கக்கூடி யது. இரத்த அமுத்தம் கட்டுப்படும். தினமும் இரண்டு அத்திப் பழங்கள் சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உலர்ந்த அத்திப் பழங்களில் உயிர்ச்சத்து E மற்றும் C ஆகியன அதிக அளவில் உள்ளது. உடலின் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிப்பதோடு, மலட்டுத் தன்மை வராமல் தடுக்கும் ஆற்றலும் உலர் அத்திப் பழங்களுக்கு உண்டு. குறைந்த கலோரிகள் மற்றும் குறைந்த கொழுப்புக்கள் கொண்ட உணவுகளை எடுத்துக் கொள்ளும் போது ஆரோக்கிய மான முறையில் உடல் எடையைக் குறைக்க முடியும். அப்படிக் குறைந்த கலோரிகளும் அதிக ஊட்டச் சத்துக்களும் நிறைந்த ஒன்று



தான் அத்திப்பழம்.

அத்திப் பழத்தில் விந்தணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் ஆற்றலும் உண்டு. இதற்கு 2 அல்லது 3 பழங்களை இரவு முழுவதும் காய்ச்சிய பசுப்பாலில் ஊற வைத்து மறுநாள் சாப்பிட்டு வரலாம். அத்திப் பழத்தில் ஏராளமான பொலி பினால்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றங் கள் உள்ளன.

அவை நச்சுகள், மற்றும் பக்ரீரியாக்கள் நம் உடலில் நுழைவதைத் தடுக்கின்றன. ஆரோக்கியமான சருமம். மற்றும் முடி வளர்ச்சிக்கு அத்திப் பழத்தை உடன் பழங்களா கவோ (fresh) அல்லது உலர் கனிகளாகவோ (dry fruits) பயன்படுத்தலாம். அத்திப் பழத்தில் மக்னீசியம், மங்கனீஸ், துத்தநாகம், பொஸ்பரஸ் போன்ற சத்துக் களும் நிறைந்து இருக்கும். குறிப்பாகத் தோலின் பொலிவை அதிகரிக்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இப்பழங்களைச் சாப்பிடுவதால் உடலில் இரத்த ஓட்டம் சீராகும்.இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தினமும் ஒன்று அல்லது இரண்டு அத்திப் பழங்கள் சாப்பிடலாம்.

உலர்ந்த அத்திப் பழங்களில் புற்று நோயைத் தடுக்கும் அன்டி ஆக்சிடன்ட்டுகள் அதிகம் உள்ளதால் நம் உடலில் புற்றுநோயை உண்டாக்கும் செல்களில் இருந்து பாதுகாக்க உதவுகிறது. அத்திப்பழத்தில் அதிகளவு நார்ச் சத்து காணப்படுவதால் உணவு சிசரி மானம் ஆகும் நேரத்தை இது அதிகரிக்கிறது. இதன் காரணமாக அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் மிக மெது வாக உடலினால் கிரகிக்கப்படுகிறது.எனவே உடனடியாக இரத்தத்தில் சீனியின் அளவானது அதிகரிக்கும் ஆபத்து தவிர்க்கப்படுகிறது.

அதற்காகவே நீரிழிவு நோயாளிகள், உடன் அத்திப் பழங்களை சாப்பிட வேண்டும். உலர்ந்த அத்திப் பழங்களை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 788





மதில் மேல் தாவி ஏறி நின்றபடி மறுபடி ஒரு தடவை வந்தியத்தேவன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். இன்னமும் அப் பெண் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்!

வந்தியத்தேவனுடைய கிறுக்குக் குணம் அவனை விட்டுப் போகவில்லை! போய் வருகிறேன்! என்று சொல்கிற பாவனையாகக் கையை ஆட்டிவிட்டு, மதிலின் அப்புறத்தில் இறங்கத் தொடங்கினான். இறங்குவதில் அவ்வளவு கஷ்டம் இல்லை. ஏனெனில் மதில் சுவரின் வெளிப்புறம் உட்புறத்தைப் போல் மட்டமாக இல்லை. சில மேடு பள்ளங்கள் இருந்தன. பக்கத்திலிருந்த மரங்களின் கிளைகள் சில சுவரின் மீது மோதி உராய்ந்து கொண்டிருந்தன. அவற்றின் உதவி கொண்டு சரசரவெனக் கீழே இறங்கினான். மணிமேகலையைத் தான் ஏமாற்றி விட்டு வந்தது பற்றி நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பின் எதிரொலியைப் போல் இன்னொரு சிரிப்பு எங்கிருந்தோ வந்தது. வந்தியத்தேவனுடைய இரத்தம் அவனுடைய உடம்பில் உறைந்து போயிற்று. கைகள் நடுங்கின கீழே குதிப்பதற்காகப் பார்த்தான்.

நாய் ஒன்று அவன் மீது பாயக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். மேலே ஏறுவதைப் பற்றி இனி யோசிப்பதற்கே இல்லை? கீழே குதித்துத்தான் ஆக வேண்டும். குதித்தால், இந்த நாயின் வாயில் ஒரு பிடி சதையையாவது கொடுத்துத் தீரவேண்டும். சற்று முன் கேட்டது சிரிப்புச் சத்தமா? அல்லது நாய் குரைத்த சத்தமா? பக்கத்தில் யாராவது மறைந்து நின்று நாயை ஏவி விட்டிருக்கிறார்களா? மேலே ஏறுவதில் அபாயம் அதிகமா? கீழே குதிப்பதில் அபாயம் அதிகமா? வந்தியத்தேவனுடைய உள்ளம் ஊசலாடியது! அவனுடைய கால்களும், எழும்பி எழும்பிக் குதித்த நாயின் வாயில் அகப்படாமல் இருப்பதற்காக ஊசலாடின.

### 10 ஆம் அத்தியாயம்
### மனித வேட்டை

வந்தியத்தேவன் நாயின் வாயில் அகப்படாமல் தரையில் குதிக்கப் பார்ப்பதா அல்லது மறுபடியும் மதில் சுவரின் மேல் ஏறுவதா என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் பக்கத்திலிருந்த மரங்களின் மறைவில் யாராவது ஒளிந்திருக்கிறார்களா என்றும் கூர்மையாகக் கவனித்தான். ஒரு மரத்தின் மறைவில் வெள்ளைத் துணி தெரிவது போலிருந்தது. சற்று முன் நாயின் குரைப்புச் சத்தத்தோடு மனிதனின் சிரிப்புக் குரல் கலந்து கேட்டது நினைவுக்கு வந்தது. மனிதர் யாராவது உண்மையில் மறைந்திருந்தால்? ஒரு மனிதனோ? பல மனிதர்களோ? அதைத் தெரிந்து கொள்ளாமல் குதிப்பது பெருந்தவறாக முடியும்.

நாயின் வாயிலிருந்து தப்பினாலும் மனிதர்களின் கையில் அகப்படும்படி நேரிடலாம். அரண் மனையின் மேல் மாடத் திலிருந்து பார்க்கும் போது ஆழ்வார்க் கடியானுடைய முகம் மதில் சுவர் மேல் தெரி வது போலத் தோன்றியது.

அந்த வைஷ்ணவன்தான் ஐயனார் கோவிலில் காத்துக் காத்துப் பார்த்து அலுத்துப் போய் இங்கு வந்து நாயை ஏவிவிட்டு வேடிக்கை செய்கிறானா, என்ன? எல்லாவற்றுக்கும் கூப்பிட்டுப் பார்த்தால் போகிறது, வைஷ்ணவரே! வைஷ்ணவரே! இது என்ன வேடிக்கை? என்றான். மறுபடியும் ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது அது ஆழ்வார்க்கடியான் குரல் அல்ல.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பயிற்சி தந்த நன்மை




சென்னை மாநகரத்தில் ஒரு பிரபல மான பள்ளி ஒன்றில் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார்கள். ரம்யாவும், செல்வியும், இருவரும் அந்த பள்ளிக்கு பள்ளி மாணவர்களை மட்டும் ஏற்றி செல்லும் ஒரு வாடகை காரில் தினமும் வந்து செல்வார்கள்.

இருவரின் பெற்றோர்கள் கொஞ்சம் தள்ளி இருக்கிற அடுத்தடுத்த அபார்ட்மெண்டில் வசித்து வருகிறார்கள்.

ரம்யாவின் தாயாரும், செல்வியின் தாயாரும், தோழிகள். இருவரும் சேர்ந்தே மதியம் பள்ளிக்கு வந்து குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்து விட்டு வீட்டுக்கு திரும்புவர். மாலை 4.30 மணிக்கு இருவரும் அதே வாடகை காரில் வீட்டுக்கு வந்து விடுவர்.

ஒரு நாள் பள்ளியில் காலை பிரேயர் வணக்கத்தில் மாணவ, மாணவிகளிடம் பிரின்ஸ்பால், ஒவ்வொரு வகுப்பிற்கும் வரிசைப் படி மாலை ஒரு மணி நேரம் ஆபத்து காலத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், மற்றவர்களை எப்படி காப்பாற்ற முயற்சிக்க வேண்டும் என்கிற பயிற்சியை தர உள்ளோம், விருப்ப முள்ளவர்கள் கலந்து கொள்ளலாம், வேண்டாமென்பவர்கள் வீட்டுக்கு போகலாம் என்று சொன்னார்.

ரம்யா செல்வியிடம், நாம் இருவரும் நம் வகுப்புக்கு அந்த பயிற்சியாளர் வரும் போது ஒரு மணி நேரம் இருந்து கற்றுக் கொள்ளலாம் என்று கூறினாள்.

செல்விக்கு அதில் அவ்வளவு விருப்பமில்லை. இதெல்லாம் வேண்டாம், என்று சொல்லி விட்டாள். ரம்யா செல்வியிடம் சும்மா ஒரு மணி நேரம் தானே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்கலாமே?

செல்வி மறுத்து தலையசைத்து விட்டாள். ரம்யாவின் வகுப்புக்கு மறுவாரம் இந்த ஆபத்து காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற பயிற்சி கொடுத்தார்கள்.

ரம்யா மட்டும் அதில் கலந்து கொண்டாள். செல்வி வீட்டுக்கு போய் விட்டாள்.

நான்கைந்து மாதங்கள் ஓடியிருந்தது. ஒரு நாள் ரம்யாவின் அபார்ட்மெண்டில் ஏழாவது தளத்தில் ஒரு வீட்டில் தீ பிடித்து கொண்டது.

இவர்களின் அபார்ட்மெண்டில் சுமார் இருபத்தி ஐந்து வீடுகள் இருந்தன. எட்டு தளங்கள் கொண்டதாக இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிபெறுவது எப்படியென்று யோசிப்பதை விட, தோல்வியடைந்தது எப்படியென்று யோசித்துப்பார்... நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய். – ஹிட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குழப்பமான கள நிலையை நம் அரசியல் விரும்புகின்றதா?

பேரினவாத சிந்தனை உடைய சிங்கள அரசியல்வாதிகள் தொடர்பில் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என நினைத்த காலம் உண்டு.

ஆனால் இப்போது நம் தமிழ் அரசியல் தரப்புகள் தொடர்பிலும் நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு நம் தமிழ் மக்கள் வந்துவிட்டனர்.

ஆம், இப்போது எங்கள் தமிழ் அரசியல் என்பது நம் தாயகத்தை கொதிநிலையில் வைத்திருக்க முற்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதை நாம் கூறும்போது இஃது என்ன? என்று சிலர் விழிக்கலாம்.

ஆனால் நம் தமிழ் அரசியல் தரப்பையும் நாம் அவதானிக்க வேண்டும். ஏனெனில் எங்களுக்குள்ளும் குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரையாக்குகின்ற அரசியல் தரப்புகள் இருக்கலாம்.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் எங்கள் தமிழ் மக்கள் இனியும் ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காகவே.

இங்கு ஏமாந்து போவதென்பது எம் மத்தியில் இருக்கக்கூடிய பணக்கார வர்க்கத்தையோ அன்றி கல்விப் புலம் சார்ந்தவர்களையோ சுட்டி நிற்பது அல்ல.

மாறாக ஏழை மக்களை ஏமாற்றுகின்ற கொடுமையே இங்கு நடக்க முடியும்.

ஏனெனில் பொதுவில் ஏழை மக்களை ஏமாற்றுவதற்கென்றே ஒரு கூட்டம் அலைகிறது.

இதுபற்றி படித்த, பணம் மிகுந்த மக்கள் கூட்டம் கருசனை கொள்ளப் போவதும் இல்லை.

ஆகையால் ஏமாற்று அரசியல் தொடர்பில் நம் ஏழை மக்களை விழிப்படையச் செய்வது எங்களின் தலையாய கடமை.

இதை நாம் சொல்வதற்காக, எங்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பது – போராட்டம் செய்வது – எதிர்ப்பை வெளிப்படுத்துவதையெல்லாம் ஏமாற்று அரசியல் எனக் கருதி விடக்கூடாது.

மாறாக, ஏமாற்று அரசியல் என்பது மாற்றீடு பற்றிச் சிந்திக்காமல் அரசுக்கு எதிராகச் செயற்படுவதை மட்டுமே மையமாகக் கொள்வதாகும்.

இதற்கு நல்ல உதாரணம் வடபகுதியில் உரிமை கோரப்படாத சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலங்களை சுவீகரிப்பதென அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

எனினும் நம் அரசியல் தரப்புகள் முன்வைத்த எதிர்ப்பைக் கருத்தில் கொண்ட அநுர அரசாங்கம் குறித்த வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்றது.

இங்குதான், உரிமை கோரப்படாத ஆறாயிரம் ஏக்கர் நிலம் தொடர்பில் நம் அரசியல் தரப்பு மேற்கொண்டு செய்யப்போவது என்ன? நிலத்தின் சொந்தக்காரர்களை இனங்கண்டு அவர்கள் மூலமாக; நிலமற்ற நம் மக்களுக்கு அவற்றைப் பிரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப் போகிறதா? அல்லது நிலச் சொந்தக்காரர்கள் தத்தம் நிலங்களை பொறுப்பெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? என்பதுதான் கேள்வி.

மேற்படி விடயங்களைச் செய்யாமல் விட்டு, மீளவும் அரசாங்கம் காணி சுவீகரிப்பில் ஈடுபட, அதனை எதிர்ப்பது என்ற நினைப்பில் இருந்தால் இதுதான் களத்தைக் கொதிநிலையில் வைத்திருக்கின்ற முனைப்பாகும்.

ஆக, இதுபற்றி எம் மக்கள் அவதானமாக இருப்பதுதான் மிகவும் முக்கியமானது.

# மாநகரசபை கட்டளைச் சட்டத்தை தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்

## காயத்திரி விக்கிரமசிங்க கோரிக்கை

77 வருடங்களாக நடைமுறையில் உள்ள மாநகர சபை கட்டளைச் சட்டம் தமிழில் மொழிபெயர்க்கப்படாதது தமிழ் பேசும் மக்களுக்கு நீதியற்ற நிலையை உருவாக்குவதாகும் என தேசிய மக்கள் சக்தியின் (NPP) கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டார உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். எனவே உடனடியாக அந்தச் சட்டம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை, அவர் மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுபிடம் முன்வைத்தார்.

அண்மையில் மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப்பை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய போதே காயத்திரி விக்கிரமசிங்க இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அந்தச் சந்திப்பில், மாநகர சபை மேயராக பதவி ஏற்கவிருக்கும் வ்ராய் கெலி பல்தஸார், துணை மேயராக பதவியேற்கவிருக்கும் ஹேமந்த வீரக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 77 வருடங்களாக நடைமுறையிலுள்ள மாநகரசபை சட்டம் தமிழில் உள்ளடக்கப்படாததை குறிப்பிட்டு தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை வழங்கும் வகையில் அவ்விதியை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஆளுநர் ஹனிப் யூசுப் இந்தக் கோரிக்கையைக் கவனமாகக் கேட்டதோடு இது தொடர்பாகத் தேவையான பரிசீலனை மேற்கொள்ளவுள்ளதாக உறுதி அளித்தார்.

இச் சட்டம் 1987 ஆம் ஆண்டு சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4,7)

## பேருந்துக் கட்டண திருத்தம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜூலை மாதம் திருத்தப்படவிருந்த வருடாந்த பேருந்து கட்டணத் திருத்தத்தை, ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன, வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தத்தை ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இவ்விடயம் தொடர்பில் ஏனைய சங்கங்களுடன் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-4,7)

## தென்னகோனிடம் குறுக்கு விசாரணை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் குறுக்கு விசாரணை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனின் தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகாரத் துஷ்பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினால் இந்தக் குறுக்கு விசாரணை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தேசபந்து தென்னக்கோனிடம் குறுக்கு விசாரணை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்வரும் 11ஆம் திகதி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வாய்மொழிச் சாட்சியங்களை அழைக்கவும் விசாரணைக் குழு முடிவு செய்துள்ளது. (ந-4,7)

## பயிர்ச்சேதத்தை மதிப்பிடக்குழு

காற்று மற்றும் மழையால் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பயிர்ச்சேதம் தொடர்பில் மதிப்பிடுவதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினால் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பயிர்ச்சேதம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட பணிப்பாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங் ஆராச்சி தெரிவித்தார். (ந-4,7)

## கோழிகளுக்கு விஷம் விஷமிகள் அடாவடி

### அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலிப் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்று வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வந்த கோழிகளுக்கு விஷம் வைத்ததால் 97 கோழிகள் உயிரிழந்துள்ளன.

கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த முட்டையிடும் கோழிகளுக்கே விசமிகளால் இவ்வாறு விஷம் வைக்கப்பட்டது. இது குறித்து அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

அச்சுவேலி வளலாய் மேற்குப் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் வாழ்வாதாரமே இவ்வாறு நாசம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 97 கோழிகள் உயிரிழந்துள்ளதுடன் இன்னும் பல கோழிகள் உடல் நலம் குன்றிய நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7,104)

## புதிய அரசியலமைப்பை ஜனாதிபதி நிறைவேற்றுவார்

### சாணக்கியன் எம்.பி நம்பிக்கை

புதிய அரசியலமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி அநுர தேர்தல் காலங்களில் தெரிவித்த வாக்குறுதிகளை விரைவில் நிறைவேற்றுவார் என தாம் எதிர்பார்த்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசியல் பேட்டியொன்றில் கருத்துரைத்துள்ள அவர்,

மூன்றில் இரண்டு பெரும்பான்[illegible] கொண்ட தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து அரசியல் தீர்வை வழங்குமாயின், அது வரவேற்கத்தக்க விடயம்.

அத்துடன் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை உள்வாங்கி ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பாதையில் அரசாங்கத்தைக் கொண்டு செல்வதே தங்களின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்[illegible]. (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்-2025



## குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும்!

**கிரகநிலை** - இராசியில் சுக்கிரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன் - தைரிய ஸ்தானத்தில் குரு - சுக ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சனி, ராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறு கிறார். 08-06-2025 அன்று செவ் வாய் பகவான் சுக ஸ்தானத்தில் இரு ந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் தைரிய வீரிய ஸ்தா னத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறு கிறார்.

**பலன்கள்:** எந்த காரியத்தை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்று மனதுக் குள் போடும் திட்டங்களை ரகசியமாக வைத்து காரியம் சாதிக்கும் திறமை பெற்ற மேஷ இராசியினரே! இந்த மாதம் பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விடயங்களில் கூட மன நிறைவு ஏற்படும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் தங்கள் வியாபாரம் தொடர் பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டி கள் விலகும். வாடிக்கையாளர்கள் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். பண வரத் தும் திருப்தி தரும். மேலிடம் உங்களிடம் நல்ல அனுகுமுறையை நீட்டிக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ் நிலை காணப்படும். வீட்டில் சுபகாரி யங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வார்த்தைகளில் நிதானத்தை கடைபிடிப்பது மற்றவர்களிடம் கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணையின் நலனில் அக் கறை காண்பிப்பீர்கள். பெண்களுக்கு பணவரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விஷயங்களில் கூட கவனமாக செய்வீர்கள்.

கலைத்துறையினர்: தேவையான பொருட்களை வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒரு காரியத்தை செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். அரசியல்துறை யினருக்கு வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். நண்பர்களிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது




நல்லது. வாழ்வில் முன்னேற அக்கறை காட்டுவீர்கள். மனத்துணிவு அதிக ரிக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும்.

மாணவர்கள்: சக மாணவர்களின் கருத்துக்களுக்கு மாற்று கருத்துக்களை கூறாமல் அனுசரித்து செல்வது சுமூ கமான சூழ்நிலையை ஏற்படுத்தும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**அஸ்வினி:** இந்த மாதம் உத்யோ கத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலை ச்சலும், டென்சனும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். பிள்ளைகளால் திடீர் செலவு உண்டா கலாம்.

**பரணி:** இந்த மாதம் யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வீண் மனக் கவலை, காரிய தாமதம் உண்டாகலாம். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலை தூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும். புதிய ஓடர்கள் கிடைக்க பெறுவீர்கள். பணியாளர்கள் மூலம் நன்மை உண் டாகும். உத்தியோகத்தில் இருப்பவர் கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள்.

**பரிகாரம்:** செவ்வாய் கிழமையில் முருகனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்க எதிர்ப்புகள் விலகும். எல்லா நலன்களும் உண்டாகும் ;

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 10,11
**அதிர்ஷ்ட தினங்கள்:** 21, 22



## எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்!

**கிரகநிலை** - இராசியில் சூரியன், புதன் - தன வாக்கு குடும்ப ஸ்தா னத்தில் குரு - தைரிய வீரிய ஸ்தா னத்தில் சந்திரன், செவ்வாய் - சுக ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத் தில் சனி, ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் இராசி யில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 14-06-2025 அன்று சூரிய பகவான் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தா னத்திற்கு மாறுகிறார் ; 22-06-2025 அன்று புதன் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 29-06-2025 அன்று சுக்கிர பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இரு ந்து இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** திறமையாக எந்த ஒரு காரியத்தையும் செய்து பாராட்டும், மதிப்பும், மரியாதையும் பெறும் ரிஷப இராசியினரே! நீங்கள் நேரத்தின் மதிப்பை அறிந்தவர். இந்த மாதம் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. அதிக முயற்சி செய்ய வேண்டி இருக்கும். பயணங்கள் ஏற்படலாம். அனைத்து தடைகளும் அகலும்.

தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணி யாளர்கள் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்க லாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. லாபம் அதிகரிக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச்சுமை காரணமாக அதிக நேரம் வேலை பார்க்க வேண்டி இருக்க லாம். நெருப்பு, ஆயுதங்களை பயன்ப டுத்துபவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

குடும்பத்தில் மனநிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். குழந்தைகளுக்காக பாடுபடுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். உற வினர், நண்பர்களுடன் திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம். நிதானம் தேவை.

குழந்தைகளை வெளிநாடு சென்று படிக்க வைக்கும் முயற்சிகள் வெற்றி தரும். பெண்கள்: உணர்ச்சி வசப்படாமல் எதையும் சிந்தித்து செயற்படுவது நன்மை தரும். கடின முயற்சியின் பேரிலேயே காரியங்கள் வெற்றி பெறும்.

அரசியல்வாதிகள், தாங்கள் சார்ந் துள்ள கட்சியின் தொண்டர்களுக்கும்,




நெருங்கியவர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். மேலிடத்திலிருந்து உங்க ளுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் ரசிகர்களுக்காகச் செலவு செய்வீர்கள். சக கலைஞர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாக னங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

**மாணவர்கள்:** கல்வியில் முன் னேற்றம் காண அதிக முயற்சி செய்து பாட ங்களை படிக்க வேண்டி இருக்கும். வாக னங்களில் செல்லும் போது கவனம்

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிக ரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண் டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடை க்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும்.

**ரோகினி:** இந்த மாதம் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலை தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. திறமை அதிகரிக் கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் செல்வ சேர்க்கை உண் டாகும். எந்த ஒரு வேலையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரிய மும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக் கும். பண வரவு அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை களில் மகாலட்சுமியை தீபம் ஏற்றி வணங்க பொருளாதார சிக்கல் தீரும். பணவரத்து கூடும். மனம் மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 12, 13
**அதிர்ஷ்ட தினங்கள்:** 23, 24

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தானந்த...

அத்துடன் அதிகாரிகள், ஆயுள் தண்டனை அனுபவிக்கும் கைதிகளும் கொலை மற்றும் பாலியல் வன்முறைக் கைதிகளும் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையின் சப்பல் பிரிவிலிருந்து இருவரையும் மாற்றி பிறிதொரு பகுதியில் வைத்துள்ளதாக வெலிக்கடைச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருவருக்கும் அரசியல் எதிரிகள் இருக்கக்கூடும் என்பதால் இருவரினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7,4)

## ஆலயக் கேணி...

15 வயதுடைய ச.ரஸ்மிலா, ர.கிருசிகா ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு புதன்வயல் மாமூலையைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் குமுழமுனைக் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் ஆலயச் சூழலில் இருந்த கேணியருகில் செல்பி எடுக்க முனைந்தவேளை இருவரும் தவறி கேணிக்குள் வீழ்ந்துள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேச இளைஞர்கள் துரிதமாகச் செயற்பட்டு அவர்களை மீட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் இரண்டு மாணவியரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,4,299)

## தாமரைப் பூ...

தோணி கவிழ்ந்தமையால் இவ் அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

கிராம மக்களால் இருவரும் குளத்திலிருந்து மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் அளம்பிலைச் சேர்ந்த இராஜசேகர் நிசாந்தன் (வயது-25), சிவனேசன் பிரணவன் (வயது-10) ஆகிய இருவருமே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,4,299)

## முதல் முஸ்லிம்...

யாழ்ப்பாண மாநகர சபையில் தனக்குக் கிடைத்த 3 (போனஸ்) பிரதிநிதிகளில் ஒன்றை யாழ்.முஸ்லிம் சமூகம் சார்பில் நிபைன் பாத்திமா றிஸ்லாக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி வழங்கியுள்ளது.

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்நியமனம் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ந-7,4)

## புலம்பெயர்ந்த...

பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள அகதி முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பிய 75 வயதான நபரொருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதி அவர் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக அமைச்சர் ஆனந்த விஜயபாலவைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கையில் இருந்து வெளியேறும்போது முறைப்படியான சட்டங்களைப் பின்பற்றியிருக்கவில்லை. அதனாலேயே அவர் மீண்டும் நாடு திரும்பும்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தவிர அவர் கைது செய்யப்படுவதற்கு வேறு காரணங்கள் எதுவுமில்லை. அந்த வகையில் அவரை விடுவிப்பதற்குரிய வழிகாட்டல்களை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளேன்.

அதேநேரம், நாட்டில் அசாதாரண சூழல் காணப்பட்டபோது ஏதோவொரு வகையில் வெளியேறியவர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத வகையில் சட்டத்தில் திருத்தத்தைச் செய்ய வேண்டியுள்ளது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் புலம்பெயர்ந்துள்ளவர்கள், அகதிகளாக வேறு நாடுகளில் தங்கியுள்ளவர்கள் எந்தவிதமான அச்சமுமின்றி நாடு திரும்ப முடியும்.

அவர்கள் தங்களது நிலங்களில் வாழுவதற்கான உரித்துக்களைக் கொண்டிருக்கின்றார்கள். நாம் ஆட்சியைப் பொறுப்பெடுத்த காலத்திலிருந்து அவர்களை நாடு திரும்புமாறு பகிரங்கமாகவே அழைப்பு விடுத்து வருகின்றோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மீள நினைவுபடுத்திக் கொள்கின்றேன் என்றார். (ந-7,4)

## பிரபா...

பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மேற்படி விபத்துச் சம்பவத்தில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி பிரபாகரசர்மா ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் அவரின் மனைவி சீத்தாலட்சுமி, மகன் அக்ஷய், மைத்துனர் சுவாமிநாதன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

தலையில் படுகாயமடைந்த அக்ஷய் நேற்று (01) இரவு 8 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை அவரின் தாயாரும் மாமனாரும் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-7,4,33)

## 161 சபை...

களில் மாத்திரமே இன்று ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் பிரகாரம் 161 உள்ளூராட்சி மன்றங்களிலேயே அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன.

எனினும் 178 சபைகளில் எந்தக் கட்சிகளுக்கோ அல்லது சுயேட்சைக் குழுக்களுக்கோ பெரும்பான்மை கிடைக்கவில்லை.

பெரும்பான்மையற்ற சபைகளின் முக்கிய தெரிவுகள் ஆணையாளர்களின் தலையீட்டில் அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் கூட்டத்தின் பின் இடம்பெறும்என பொதுநிர்வாக மாகாண சபை, உள்ளூராட்சி சபை அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ந-7,4)

மஹஜன சம்பத
திகதி 2025.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 5847
B 3 3 8 0 3 7
அத சம்பத
B 8 0 3 7
சீட்டிழுப்பு இலக்கம் 0422
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1877
A 04 06 66 71 A
81272

மெகா பவர்
திகதி 01/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2195
Z 04 45 52 62 78

ஜய
திகதி 2025.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 115
I 2 6 0 1

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4089
சீட்டிழுப்பு திகதி 01.06.2025
R 53 54 74 78
R

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 1156
இடபம் 16 21 28 41 இடபம்
86114 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.06.2025 வெற்றி வாரம் 555
V 7 3 7 4 0 0
70565
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,328,243.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2821
சீட்டிழுப்பு திகதி 2025.06.01 தினம் ஞாயிற்றுக்கிழமை
35 66 70 73 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,515,360.00

சனிதா
திகதி 01.06.2025 வெற்றி வாரம் 4982
03 14 76 78 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,728,208.40
91655

சசிரி
வெற்றி வாரம் 695
சீட்டிழுப்பு திகதி 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை
13 43 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4533
சீட்டிழுப்பு திகதி 01.06.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
10 17 18 62 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,820,051.20
192975

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 02 59 61 68 72
1997
01.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.576,725,574.40

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2647
சீட்டிழுப்பு திகதி: 2025.06.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,181,996.00
ADA KOTIPATHI
19 54 57 75 E
333947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3097)

076 825 7716 (ஆகாஸ்)



## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இரண்டு கார்கள்
(Nissan Moco, MahindraKuv 100)
நிசான் மொகோ, மகேந்திரா கே.யூ.வீ 100,
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 693 2227
(C-3100)


தமிழர் தாயகத்தில்

# 35 இற்கும் அதிக சபைகளில் தமிழரசே ஆட்சியமைக்கும்

## எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை

வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் 35 இற்கும் அதிகமான சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி எதிர்பார்த்துள்ளதாக அக்கட்சியின் பதில்பொதுச்செயலாளரும், ஊடகப்பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 377ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் வடக்கு,கிழக்கில் 35 சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு எதிர்பார்ப்புடன் உள்ளது.

அண்மைய நாட்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற சபைகளில் அந்தந்தக் கட்சிகள் மேயர், தவிசாளர் பதவிகளுக்கான உறுப்பினர்களை முன்மொழியவுள்ளதோடு அவர்களுக்கான ஆதரவினை மேற்படி கட்சிகள் வழங்குவது என்ற பொதுப்படையான இணக்கப்பாடு காணப்படுகின்றது என்றார். (ந-4,7)

## முன்னணியும்...

கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

நேற்றிரவு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும்,

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் இணைத் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந-4,7,33)


## Smart Science Academy

A/L CHEMISTRY Lt.T. நாகரத்தினம் BSc(cey) ஆசிரியர்
ஞாபகார்த்த மாதாந்த தொடர் பரீட்சை இரசாயன அலை 1 இல் தோற்றிய 142 மாணவர்களில் முதல் 10 மாணவர்களின் பெறுபேறுகள் (2027 Batch)

| | | | |
|---|---|---|---|
| 1. | S.Mithushaan | - 98 | J/H/C |
| 2. | A.Aksaya | - 98 | J/V.G.H.S |
| 3. | N.Mithusa | - 92 | J/A.L.C |
| 4. | B.Ramanan | - 91 | J/K.H.C |
| 5. | S.Suthan | - 87 | J/K.H.C |
| 6. | A.Abeeshenth | - 86 | St. patrics |
| 7. | T.Narthana | - 82 | J/V.G.H.S |
| 8. | E.Mery stella | - 81 | J/H.F.C |
| 9. | S.Tharsan | - 83 | J/K.C.C |
| 10. | K.Sankavi | - 80 | J/H.L.C |

இரசாயனவியல் ஆசிரியர்
திரு.S.சுரேஸ்குமார்
BSc(Hons), PGDE (marit)

154A, Navalar Road, Jaffna.
Tel : 077 555 9028, 077 351 3734
(4441)



## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகளைச் செய்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.
வயது : 40 - 50
பணி நேரம் : காலை 7.00 – மாலை 5.00
077 459 7938
075 712 7528
(1190)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237 (C-3098)



சுத்தமான, சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை
1Kg - 400/-

தேவைப்படும் அளவு 100 Kg



மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-3098)
தொடர்புகளுக்கு : 077 590 2467


## மரண அறிவித்தல்



தோற்றம் 13 - 05 - 1961 | மறைவு 01 - 06 - 2025

### திருமதி சிறீசாந்தினி மகேந்திரராஜா
### (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புலோலியினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறீசாந்தினி மகேந்திரராஜா அவர்கள் நேற்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவஞான சுந்தரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் மகேந்திரராஜா அவர்களின் அன்பு மனைவியும் திவ்யா, கௌசிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் விவேக், கார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அக்ஷராவின் பாசமிகு அம்மம்மாவும் சிறிரஞ்சனி, சிறீலதன், சிறீநந்தினி, சிறீராஜன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரதி, சுதர்சன், துஷ்சாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமச்சடங்குகள் இன்று (02.06.2025) திங்கட்கிழமை பெருந்தெரு, புலோலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
மகேந்திரராஜா (கணவர்) - 077 991 4759
கார்த்தீபன் (மருமகன்) - 076 848 5725
(C-3095)


## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ பகுதிநேர உதவியாளர் | : 0757720604 |
| ➢ Medicine Store Assistant | : 0752217661 |
| ➢ CCTV Technician | : 0773767899 |
| ➢ Printing ,Photoshop Work(Female) | : 0705973429 |
| ➢ Chartered Accountant | : 0771298168 |
| ➢ Waiter | : 0774078235 |
| ➢ Receptionist with Designing Work | : 0776040400 |
| ➢ ஓட்டோ மெக்கானிக் | : 0779078839 |
| ➢ Market Analyst / inventory Executive. | : 0742142186 |
| ➢ Store Keeper | : 0771298168 |
| ➢ Sales Assistant | : 0760116634 |
| ➢ Customer Care Officer | : 0773501095 |
| ➢ தோட்டவேலை | : 0771737667 |
| ➢ Management Trainee, Intern(Finance) | : 0783792577 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0741383368
DEWMAS, 51, Amman Road, Nallur
(4427)



எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613
(C-3096)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org